UNIVERSAL
LIBRARY
OU_208240
UNIVERSAL
LIBRARY

**OSMANIA UNIVERSITY LIBRARY**

Call No. Tm 894.8111 S74V. Accession No. Tm 274

Author [redacted] Subramania Barathaiar

Title Vedantha padalgal. 1948

This book should be returned on or before the date last marked below.

# வேதாந்தப் பாடல்கள்

ஸ்ரீ சி. சுப்பிரமணிய பாரதி

"பெற்ற தாயும் பிறந்த பொன்னாடும்
நற்றவ வானிலும் நனி சிறந்தனவே."

பாரதி பிரசுராலயம்,

திருவல்லிக்கேணி, சென்னை.

(காபிரைட் ரிஜிஸ்டர் செய்தது)

எட்டாம் பதிப்பு] 1948 [விலை அணா 5

ஹிந்துஸ்தானி பிரசார் அச்சுக்கூடம்
தியாகராயநகர்,
சென்னை 17.

# முன்னுரை

தாயுமானவர், பட்டினத்துப்பிள்ளை, இராமலிங்க சுவாமிகள் முதலிய ஞானிகளின் பாடல்கள் மூலமாகத் தமிழ் மக்களாகிய நாம வேதாந்த ஸாரத்தைப் பருகி யிருப் பினும, பாரதியாரின் வேதாந்த கீதங்களையும செய்யுட் களையும் படிக்க வேண்டியது மிகவும் அவசியம. ஏனெனில், வேதாந்த சாஸ்திரத்தின் பயன் சித்தத் தெளிவும மனத்திற்கு ஆறுதலும உண்டாவதே என்று கருதப்படுமாயின், பாரதி யாரின் பாடல்களால் அப் பயனை எளிதில் அடையலாம். வேதாந்த ஆராய்ச்சி செய்பவர்கள் நமக்குத் தெளிவாக எடுத்துரைக்காத காரணத்தால அந்தச் சாஸ்திரத்தை மிகக் கடினமான தென்று நினைக்க நேரிடுகிறது. ஆனால பாரதி யார் அதி நுட்பமான விஷயஙகளையும யாரும அறியும்படி எளிய நடையில் விளக்கிக் காட்டுகிருர். வேதாந்த நூல்கள் பெருமபாலும மனித வாழ்க்கையின் அநித்தியத்தையும், மனிதாகளுக்கு நேரிடும பிணி மூப்பு முதலிய கேடுகளையும பற்றி விசேஷமாக முறையிடுவதால், நமக்கு லௌகிக விஷயங்களில் ஊக்கம் குன்றிப் போவதுடன் நம் வாழ் நாளில் வெறுப்பு ஏற்படுகிறது. ஆனல்,

“நெஞ்சிற் கவலை நிதமும பயிராக்கி
அஞ்சி யுயிர் வாழ்த லறியாமை” என்றும்

“எத்தனை கோடி இன்பம் வைத்தாய்—எங்கள்
இறைவா, இறைவா, இறைவா”—என்றும்

“துன்பமே யியற்கை யெனும
சொல்லை மறந்திடுவோம
இன்பமே வேண்டி நிற்போம்
யாவு மவள் தருவாள்”—என்றும்

பாடிய கவியைப் படிக்கும் யாருக்குத்தான் மனத்தளர்ச்சி ஏற்படும்?

பாரதியார் அத்வைதக் கொள்கையில் பூர்ண நம்பிக்கையுள்ளவர் :—

"முன்னோர்க ளெவ்வுயிருங் கடவு ளென்றார்
முடிவாக அவ்வுரையை நான் மேற்கொண்டேன்
அன்னோர்க ளுரைத்த தன்றிச் செய்கையில்லை
அத்வைத நிலைகண்டால் மரண முண்டோ?"

இக் கொள்கையைக் கைக் கொண்டவர் உலகத்துள்ள எவ்வுயிரிடத்தும் அன்பு பாராட்டுவது வியப்பன்று :—

"ஈரமிலா நெஞ்சுடையார் சிவனைக் காணார்
எப்போதும் அருளை மனத்திசைத்துக் கொள்வாய்"
"உள்ளதெலா மோ ருயிரென்று தேர்ந்தபின்
உள்ளங் குலைவ துண்டோ—மனமே
வெள்ளமெனப் பொழி தண்ணரு ளாழ்ந்ததன்
வேதனை யுண்டோ டா?"

பாரதியாரின் வேதாந்தப் பாடல்களின் பெருமையை இம்மாதிரியான ஒரு சிறு முன்னுரையில் எழுதுவது சாத்தியமன்று. ஆனால், ஒன்றுமாத்திரம உறுதியாகச் சொல்லலாம். அவர் எழுதியிருக்கும "சங்கு," "ஒளியும இருளும்," "பகைவனுக் கருள்வாய்," "தெளிவு" போன்ற பாடல்களைப் படிக்கும் ஒவ்வொருவரும் ஞானிகள் கூட்டத்தில் பாரதியார் மிகச் சிறந்தவரென்றும், அவர் வாக்கு தெய்வ வாக்கு என்றும் கருதுவார்களென்பது நிச்சயம்.

பாரதி பிரசுராலயத்தார்

---

# பொருளடக்கம்

—✱—


| | | | பக்கம் |
|---|---|---|---|
| 1. | மாயையைப் பழித்தல் | .... | 1 |
| 2. | அச்சமில்லை | ... | 2 |
| 3. | சங்கு | .... | 4 |
| 4. | அறிவே தெய்வம் | .... | 4 |
| 5. | அழகுத் தெய்வம் | .... | 5 |
| 6. | ஜீவன் முக்தி | .... | 8 |
| 7. | ஜய பேரிகை | .... | 9 |
| 8. | அல்லா | .... | 10 |
| 9. | யேசு கிறிஸ்து | ... | 11 |
| 10. | கற்பனை யூர் | .... | 12 |
| 11. | நந்தலாலா | .... | 14 |
| 12. | சொல் | ... | 15 |
| 13. | ஸூர்ய ஸ்தோமம்—ஞானபாநு | .... | 17 |
| 14. | ஒளியும் இருளும் | .... | 18 |
| 15. | கடமை | .... | 19 |
| 16. | விடுதலை (1) | .... | 20 |
| 17. | விடுதலை (2) | .... | 21 |
| 18. | விடுதலை—சிட்டுக் குருவி | .... | 22 |
| 19. | விடுதலை வெண்பா | .... | 22 |
| 20. | மனப் பெண் | .... | 24 |
| 21. | நெஞ்சொடு சொல்வது | .... | 25 |

| | | | பக்கம் |
|---|---|---|---|
| 22. | மனமே | .... | 27 |
| 23. | மனத்திற்குக் கட்டளை | .... | 29 |
| 24. | மனத்திற்கு | .... | 29 |
| 25. | பகைவனுக் கருள்வாய் | .... | 29 |
| 26. | தெளிவு | .... | 31 |
| 27. | ஆத்ம ஜயம் | .... | 32 |
| 28. | பரமசிவ வெள்ளம் | .... | 32 |
| 29. | பொய்யோ ? மெய்யோ ? | .... | 37 |
| 30. | நான் | .... | 40 |
| | அனுபந்தம் 1 | | |
| | பாடல் முதற் குறிப்பகராதி | .... | 42 |
| | அனுபந்தம் 2. | | |
| | குறிப்புரை | .... | 44 |

# வேதாந்தப் பாடல்கள்

## 1. மாயையைப் பழித்தல்

ராகம்—காம்போதி. தாளம்—ஆதி.

1. உண்மை யறிந்தவ ருன்னைக் கணிப்பாரோ
மாயையே—மனத்
திண்மையுள்ளாரை நீ செய்வது
மொன்றுண்டோ—மாயையே.

2. எத்தனை கோடி படை கொண்டு வந்தாலும்
மாயையே—நீ
சித்தத் தெளி வெனுந் தீயின்முன்
நிற்பாயோ—மாயையே.

3. என்னைக் கெடுப்பதற் கெண்ணமுற்றாய்
கெட்ட மாயையே—நான்
உன்னைக்கெடுப்ப துறுதியென்
றேயுணர் மாயையே.

4. சாகத்துணியிற் சமுத்திர மெம்மட்டு
மாயையே—இந்தத்
தேகம்பொய் யென வுணர் தீரரை யென்
செய்வாய்—மாயையே.

5. இருமை யழிந்தபின் எங்கிருப் பாயற்ப
மாயையே—தெளிந்
தொருமை கண்டார் முன்ன மோடாது
நிற்பையோ—மாயையே.

6. நீதரு மின்பத்தை நேரென்று கொள்வேனோ
மாயையே—சிங்கம்
நாய்தரக் கொள்ளுமோ நல்லர
சாட்சியை—மாயையே.

7. என்னிச்சை கொண்டுனை யெற்றி விட
வல்லேன் மாயையே—இனி
உன்னிச்சை கொண்டெனக் கொன்றும்
வராது காண்—மாயையே.

8. யார்க்குங் குடியல்லேன் யானென்ப
தோர்ந்தனன் மாயையே—உன்றன்
போர்க்கஞ்சு வேனோ பொடியாக்குவே
னுன்னை—மாயையே.

---

## 2. அச்சமில்லை

(பண்டாரப் பாட்டு)

அச்சமில்லை யச்சமில்லை
அச்சமென்ப திலையே

1. இச்சகத்து ளோரெலாம்
எதிர்த்து நின்ற போதினும்,
அச்சமில்லை யச்சமில்லை
அச்சமென்ப தில்லையே.
துச்சமாக வெண்ணி நம்மைத்
தூறு செய்த போதினும்,
அச்சமில்லை யச்சமில்லை
அச்சமென்ப தில்லையே.

## அச்ச மில்லை

பிச்சை வாங்கி யுண்ணும் வாழ்க்கை
பெற்று விட்ட போதினும்,
அச்சமில்லை யச்சமில்லை
அச்சமென்ப தில்லையே.
இச்சை கொண்ட பொருளெலாம்
இழந்து விட்ட போதினும்.
அச்சமில்லை யச்சமில்லை
அச்சமென்ப தில்லையே.

2. கச்சணிந்த கொங்கை மாதர்
கண்கள் வீசு போதினும்,
அச்சமில்லை யச்சமில்லை
அச்சமென்ப தில்லையே.
நச்சை வாயி லேகொணர்ந்து
நண்ப ரூட்டு போதினும்,
அச்சமில்லை யச்சமில்லை
அச்சமென்ப தில்லையே.
பச்சையூ னியைந்த வேற்
படைகள் வந்த போதினும்,
அச்சமில்லை யச்சமில்லை
அச்சமென்ப தில்லையே.
உச்சிமீது வானிடிந்து
வீழுகின்ற போதினும்,
அச்சமில்லை யச்சமில்லை
அச்சமென்ப தில்லையே.

---

## 3. சங்கு

1. செத்தபிறகு சிவலோகம் வைகுந்தம்
சேர்ந்திடலாமென்றே எண்ணி யிருப்பார்
பித்த மனித ரவர் சொலுஞ் சாத்திரம்
பேயுரை யாமென்றிங் கூதேடா சங்கம்.

2 இத்தரை மீதினி லேயிந்த நாளினில
இப்பொழு தேமுக்தி சேர்ந்திட நாடிச்
சுத்த அறிவு நிலையிற களிப்பவர்
தூயவ ராமென்றிங் கூதேடா சங்கம்.

3. பொய்யுறு மாயையைப் பொய்யெனக் கொண்டு
புலன்களை வெட்டிப் புறத்தி லெறிந்தே
ஐயுற லின்றிக் களித்திருப் பாரவர்
ஆரிய ராமென்றிங் கூதேடா சங்கம்.

4. மையுறு வாள்விழி யாரையும் பொன்னையும்
மண்ணெனக் கொண்டு மயக்கற்றிருந்தாரே
செய்யுறு காரியம் தாமன்றிச் செய்வார்
சித்தர்களாமென்றிங் கூதேடா சங்கம.

## 4. அறிவே தெய்வம்

கண்ணிகள

1. ஆயிரந் தெய்வங்க ளுண்டென்று தேடி
அலையு மறிவிலிகாள்—பல்
லாயிரம் வேத மறிவொன்றே தெய்வமுண்
டாமெனல் கேளீரோ ?

2. மாடனைக் காடனை வேடனைப் போற்றி
மயங்கு மதியிலிகாள்—எத
னூடுநின் றோங்கு மறிவொன்றே தெய்வமென்
றோதி யறியீரோ?

3. சுத்த அறிவே சிவமென்று கூறுஞ்
சுருதிகள் கேளீரோ?—பல
பித்த மதங்களி லேதடு மாறிப்
பெருமை யழிவீரோ?

4. வேடம்பல கோடியோ ருண்மைக் குளவென்று
வேதம் புகன்றிடுமே—ஆங்கோர்
வேடத்தை நீருண்மையென்று கொள்வீரென்றவ்
வேத மறியாதே.

நாமம்பல் கோடியோ ருண்மைக் குளவென்று
நான் மறை கூறிடுமே—ஆங்கோர்
நாமத்தை நீருண்மை யென்றுகொள் வீரென்றந்
நான்மறை கண்டிலதே.

6. போந்த நிலைகள் பலவும் பராசக்தி
பூணு நிலையாமே—உப
சாந்த நிலையே வேதாந்த நிலையென்று
சான்றவர் கண்டனரே.

7. கவலை துறந்திங்கு வாழ்வது வீடென்று
காட்டு மறைகளெலாம்—நீவிர்
அவலை நினைந்துமி மெல்லுதல் போலிங்
கவங்கள் புரிவீரோ?

8. உள்ள தனைத்திலு முள்ளொளியாகி
யொளிர்ந்திடு மான்மாவே—இங்கு
கொள்ளற் கரிய பிரமமென் றேமறை
கூவுதல் கேளீரோ ?

9. மெள்ளப் பலதெய்வம் கூட்டி வளர்த்து
வெறுங் கதைகள் சேர்த்துப்—பல
கள்ள மதங்கள் பரப்புதற் கோர்மறை
காட்டவும் வல்லீரோ ?

10. ஒன்று பிரம முள துண்மை யஃதுன்
உணர் வெனும் வேதமெலாம—என்றும்
ஒன்று பிரம முள துண்மை யஃதுன்
உணர்வெனக் கொள்வாயே.

---

## 5. அழகுத் தெய்வம்

1. மங்கியதோர் நிலவினிலே
கனவிலிது கண்டேன்
வயதுபதி ஞறிருக்கும
இளவயது மங்கை
பொங்கிவரும் பெருநிலவு
போன்றவொளி முகமும்
புன்னகையின் புதுநிலவும்
போற்றவருந் தோற்றம்
துங்கமணி மின்போலும்
வடிவத்தாள் வந்து
தூங்காதே யெழுந்தென்னைப்
பாரென்று சொன்னாள்.



அழகென்னுந் தெய்வந்தான்
அதுவென்றே யறிந்தேன்
... ... ... ... ...
முகத்திலருள் காட்டினாள்
மோகமது தீர்ந்தேன்.

—பாரதி

அங்கதனிற் கண்விழித்தேன்
அடடாவோ! அடடா!
அழகென்னுந் தெய்வந்தான்
அதுவென்றே யறிந்தேன்.

2. யோகந்தான் சிறந்ததுவோ
தவம் பெரிதோ என்றேன்;
யோகமே தவம் தவமே
யோகமென வுரைத்தாள்.
ஏகமோ பொருளன்றி
இரண்டாமோ என்றேன்;
இரண்டுமாம் ஒன்றுமாம்
யாவுமாம் என்றாள்.
தாகமறிந் தீயுமருள்
வான்மழைக்கே யுண்டோ?
தாகத்தின் துயர் மழைதா
னறிந்திடுமோ வென்றேன்.
வேகமுடன் அன்பினையே
வெளிப்படுத்தா மழைதான்
விருப்புடனே பெய்குவது
வேறாமோ என்றாள்.

3. காலத்தின் விதி மதியைக
கடந்திடுமோ என்றேன்;
காலமே மதியினுக்கோர்
கருவியா மென்றாள்.
ஞாலத்தில் விரும்பியது
நண்ணுமோ என்றேன்;

நாவிலே ஒன்றிரண்டு
    பலித்திடலா மென்றாள்.
ஏலத்தில் விடுவதுண்டோ
    எண்ணத்தை யென்றேன்;
எண்ணினால் எண்ணியது
    நண்ணுங்கா ணென்றாள்.
மூலத்தைச் சொல்லவோ
    வேண்டாமோ என்றேன்;
முகத்திலருள் காட்டினாள்
    மோகமது தீர்ந்தேன்.

---

## 6. ஜீவன் முக்தி

ராகம்—கமாஸ். தாளம்—ஆதி

பல்லவி

ஜயமுண்டு பயமில்லை மனமே—இந்த
ஜன்மத்திலே விடுதலையுண்டு நிலையுண்டு. (ஜய)

அநுபல்லவி

பயனுண்டு பக்தியினாலே—நெஞ்சிற்
பதிவுற்ற குலசக்தி சரணுண்டு பகையில்லை. (ஜய)

சரணங்கள்

1. புயமுண்டு குன்றத்தைப் போலே—சக்தி
பொற்பாதமுண்டதன் மேலே
நியமமெல்லாம் சக்தி நினைவன்றிப் பிறிதில்லை;
நெறியுண்டு; குறியுண்டு; குலசக்தி வெறியுண்டு.

2. மதியுண்டு செல்வங்கள் சேர்க்கும்—தெய்வ
வலியுண்டு தீமையைப் பேர்க்கும்;
விதியுண்டு; தொழிலுக்கு விளைவுண்டு; குறைவில்லை
விசனப் பொய்க் கடலுக்குக்குமரன் கைக்கணையுண்டு
(ஜய)

3. அலைபட்ட கடலுக்கு மேலே—சக்தி
அருளென்னுந் தோணியி னாலே
தொலையெட்டிக் கரையுற்றுத் துயரற்று விடுபட்டுத்
துணிவுற்ற குலசக்தி சரணத்தில் முடிதொட்டு (ஜய)

---

## 7. ஜய பேரிகை

பல்லவி

ஜய பேரிகை கொட்டடா—கொட்டடா
ஜய பேரிகை கொட்டடா!

சரணங்கள்

1. பயமெனும் பேய்தனை யடித்தோம்—பொய்மைப்
பாம்பைப் பிளந் துயிரைக் குடித்தோம்
வியனுலக னைத்தையும் அமுதென நுகரும்
வேத வாழ்வினைக் கைப் பிடித்தோம். (ஜயபேரிகை)

2. இரவியி னொளி யிடைக் குளித்தோம்—ஒளி
யின் னமுதினை யுண்டு களித்தோம்
கரவினில் வந்துயிர்க் குலத்தினை யழிக்கும்
காலன் நடு நடுங்க விழித்தோம். (ஜயபேரிகை)

3\. காக்கை, குருவி யெங்கள் ஜாதி—நீள்
கடலு மலையு மெங்கள் கூட்டம்
நோககுந் திசை யெல்லாம் நாமன்றி வேறில்லை ;
நோக்க நோக்கக் களி யாட்டம். (ஜயபேரிகை)

---

## 8. அல்லா

பல்லவி

அல்லா, அல்லா, அல்லா !

சரணங்கள்

1\. பல்லாயிரம் பல்லாயிரங்கோடி கோடி யண்டங்கள்
எல்லாத் திசையிலுமோ ரெல்லை யில்லா வெளி
வானிலே
நில்லாது சுழன்றோட நியமஞ் செய் தருள் நாயகன்
சொல்லாலு மனத்தாலுந் தொடரொணாத பெருஞ்
சோதி !
(அல்லா, அல்லா, அல்லா!)

2\. கல்லாதவ ராயினும் உண்மை சொல்லாதவராயினும்
பொல்லாதவ ராயினும் தவமில்லாதவராயினும்
நல்லாருரை நீதியின்படி நில்லாதவ ராயினும்
எல்லாரும் வந்தேத்து மளவில் யமபயங் கெடச்
செய்பவன்
(அல்லா, அல்லா, அல்லா !)

---

# 9. யேசு கிறிஸ்து

தீய ஒழுக்கத்தில் நின்று மேரி மக்தலேன் என்பாள் யேசு கிறிஸ்துவை அடைந்து, தனது ஒழுக்கத்திற்காகப் பரிதபித்து, தன்னைக் கடையேற்ற வேண்டுமென்று வேண்டினாள். யேசுவும் அவளுக்கு அருள் புரிந்தார். யேசு புதைக்கப்பட்ட மூன்றாம் நாள் அவர் உடம்புடன் எழுந்து விண்ணேகினதை மேரி மக்தலேன் கண்ணால்கண்டு பிறருக் கறிவித்ததாய்க் கிறிஸ்து புராணம் கூறுகிறது. இக் கதையையே இங்கு விளக்கியிருக்கிறது.

1. 'ஈசன் வந்து சிலுவையில் மாண்டான்,
எழுந் துயிர்த்தனன் நாள் ஒரு மூன்றில்;
நேச மா மரியா மக்தலேநா
நேரிலே யிந்தச் செய்தியைக் கண்டாள்.
தேசத்தீர்! இதன் உட்பொருள் கேளீர்:
தேவர் வந்து நமக்குட் புகுந்தே
நாச மின்றி நமை நித்தங் காப்பார்,
நம் அகந்தையை நாம் கொன்று விட்டால்.

2. அன்பு காண் மரியா மக்தலேநா,
ஆவி காணுதிர் யேசு கிறிஸ்து
முன்பு தீமை வடிவினைக் கொன்றால்
மூன்று நாளினில் நல்லுயிர் தோன்றும்;
பொன் பொலிந்த முகத்தினிற் கண்டே
போற்றுவாள் அந்த நல்லுயிர் தன்னை
அன்பெனும் மரியா மக்தலேநா
ஆஹா! சாலப் பெருங்களி யிஃதே.

3. உண்மை யென்ற சிலுவையிற் கட்டி
உணர்வை ஆணித தவங்கொண் டடித்தால்,
வண்மைப் பேருயிர் யேசு கிறிஸ்து
வான மேனியில் அங்கு விளங்கும்
பெண்மை காண் மரியா மக்தலேநா,
பேணும் நல்லறம் யேசு கிறிஸ்து.
நுண்மை கொண்ட பொருளிது கண்டீர்
நொடியி லிஃது பயின்றிட லாகும்.

---

## 10. கற்பனையூர்

[ஜான் ஸ்கர் என்ற ஆங்கிலப் புலவன் 'நக்ஷத்ர தூதன்' என்ற பத்திரிகையில் பிரசுரித்த **'The Town of Let's Pretend''** என்ற பாட்டின் மொழிபெயர்ப்பு]

1. கற்பனை யூரென்ற நகருண்டாம்—அங்கு
கந்தர்வர் விளையாடு வராம்.
சொப்பன நாடென்ற சுடர்நாடு—அங்கு
சூழ்ந்தவர் யாவர்க்கும் பேருவகை.

2. திருமணை யிதுகொள்ளைப் போர்க்கப்பல்—இது
ஸ்பானியக் கடலில் யாத்திரை போம்
வெருவுற மாய்வார் பலர் கடலில—நாம்
மீளவு நமதூர் திரும்பு முன்னே.

3. அந்நகர் தனிலோ ரிளவரசன்—நம்மை
அன்பொடு கண்டுரை செய்திடுவான்;
மன்னவன் முத்தமிட் டெழுப்பிடவே—அவன்
மனைவியு மெழுந் தங்கு வந்திடுவாள்.

4. எக்காலமும் பெருமகிழ்ச்சி யங்கே
எவ்வகைக் கவலையும் போரு மில்லை ;
பக்குவத் தேயிலை நீர் குடிப்போம்—அங்கு
பதுமை கைக் கிண்ணத்தி லளித்திடவே.

5. இன்னமுதிற் கது நேராகும்—நம்மை
யோவான் விடுவிக்க வரு மளவும்
நன்னக ரதனிடை வாழ்ந்திடுவோம்—நம்மை
நலிந்திடும் பே யங்கு வாராதே.

6. குழந்தைகள் வாழ்ந்திடும பட்டணங் காண்—அங்கு
கோல் பந்து யாவிற்கு முயி ருண்டாம
அழகிய பொன்முடி யரசிகளாம்—அன்றி
அரசிளங் குமரிகள் பொம்மை யெலாம்.

7. செந் தோ லசுரனைக் கொன்றிடவே—அங்கு
சிறு விறகெல்லாம் சுடர் மணி வாள்.
ஸந்தோஷத்துடன் செங்கலையும்—அட்டைத்
தாளையுங் கொண்டங்கு மனை கட்டுவோம.

8. கள்ள ரவ் வீட்டினுட் புகுந்திடவே—வழி
காண்பதிலா வகை செய் திடுவோம்—ஓ !
பிள்ளைப் பிராயத்தை இழந்தீரே !—நீர்
பின்னு மந் நிலைபெற வேண்டீரோ ?

9. குழந்தைக ளாட்டத்தின் கனவை யெல்லாம்—
கோல நன் னாட்டிடைக் காண்பீரே ; [அந்தக்
இழந்த நல் லின்பங்கள் மீட்குறலாம்—நீர்
ஏகுதிர் கற்பனை நகரினுக்கே.

குறிப்பு:—இதன் பொருள்; கற்பனை நகர மென்பது சித்தத்தில் குழந்தை நிலை பெறுவதை இங்கு குறிப்பிடுகிறது. 'யோவான்' என்பது குமார தேவனுடைய பெயர். 'அக் கடவுள் மனிதனுக்குள்ளே நிலைபெற்று, மனிதன் மோக்ஷ மடைவதற்கு முன்னர் குழந்தைப் பருவத்தை அடைய வேண்டும்' என்று யேசு கிறிஸ்து நாதர் சொல்லி யிருக்கும் பொருளை இப்பாடல் குறிப்பிடுகிறது. கவலைகளை முற்றுந் துறந்துவிட்டு உலகத்தை வெறுமே லீலையாகக் கருதினா லன்றி மோக்ஷம் எய்தப் படாது.

---

## 11. நந்தலாலா

ராகம்—யதுகுல காம்போதி. தாளம்—ஆதி.

1. காக்கைச் சிறகினிலே நந்தலாலா—நின்றன்
கரிய நிறந் தோன்றுதையே நந்தலாலா;

2. பார்க்கு மரங்களெல்லாம் நந்தலாலா—நின்றன்
பச்சைநிறந் தோன்றுதையே நந்தலாலா:

3. கேட்கு மொலியிலெல்லாம் நந்தலாலா—நின்றன்
கீத மிசைக்குதடா நந்தலாலா;

4. தீக்குள் விரலை வைத்தால் நந்தலாலா—நின்னைத்
தீண்டு மின்பந் தோன்றுதடா நந்தலாலா.

---

# 12. சொல்

சொல் ஒன்று வேண்டும். தேவ சக்திகளை நம்முள்ளே நிலைபெறச் செய்யும் சொல் வேண்டும்.

1. தேவர் வருகவென்று சொல்வதோ? — ஒரு
செம்மைத் தமிழ் மொழியை நாட்டினால்
ஆவலறிந்து வருவீர் கொலோ? — உம்மை
யன்றி யொரு புகலு மில்லையே.

2. 'ஓம்' என்றுரைத்து விடிற்போதுமோ? — அதில்
உண்மைப் பொருளறிய லாகுமோ?
தீமையனைத்து மிறந்தேகுமோ? — என்றன்
சித்தந் தெளிவு நிலை கூடுமோ?

3. 'உண்மை யொளிர்க' வென்றுபாடவோ? — அதில்
உங்களருள் பொருந்தக் கூடுமோ?
வண்மை யுடையதொரு சொல்லினால் — உங்கள்
வாழ்வு பெற விரும்பி நிற்கிறோம்.

4. "தீயை யகத்தினிடை மூட்டுவோம்" — என்று
செப்பு மொழி வலிய தாகுமோ?
ஈயைக் கருடநிலை யேற்றுவீர் — எம்மை
என்றுந் துயர மின்றி வாழ்த்துவீர்.

5. வான மழை பொழிதல் போலவே — நித்தம்
வந்து பொழியு மின்பங் கூட்டுவீர்
கானை யழித்து மனை கட்டுவீர் — துன்பக்
கட்டுச் சிதறிவிழ வெட்டுவீர்.

6. விரியு மறிவு நிலை காட்டுவீர்—அந்த
வீழுஞ் சிறுமைகளை யோட்டுவீர்
தெரியு மொளிவிழியை நாட்டுவீர்—நல்ல
தீரப் பெருந் தொழிலிற் பூட்டுவீர்.

7. மின்ன லனைய திற லோங்குமே—உயிர்
வெள்ளங் கரையடங்கிப் பாயுமே
தின்னும் பொரு ளமுத மாகுமே—இங்குச்
செய்கை யதனில் வெற்றி யேறுமே.

8. தெய்வக் கனல் விளைந்து காக்குமே—நம்மைச்
சேரு மிரு ளழியத் தாக்குமே.
கை வைத்தது பசும்பொன் னாகுமே—பின்பு
காலன் பய மொழிந்து போகுமே.

9. 'வலிமை, வலிமை' யென்று பாடுவோம்—என்றும்
வாழுஞ் சுடர்க் குலத்தை நாடுவோம்
கலியைப் பிளந்திடக் கை யோங்கினோம்—நெஞ்சிற்
கவலை யிருள னைத்து நீங்கினோம்.

10. 'அமிழ்தம் அமிழ்தம்' என்று கூறுவோம்—நித்தம்
அனலைப் பணிந்து மலர் தூவுவோம்
தமிழிற் பழமறையைப் பாடுவோம்—என்றுந்
தலைமை பெருமை புகழ் கூடுவோம்.

## 13. ஸூர்ய ஸ்தோமம்—ஞானபாநு

1. திருவளர் வாழ்க்கை, கீர்த்தி, தீரம்,
நல்லறிவு, வீரம,
மருவுபல் கலையின் சோதி, வல்லமை
யென்ப வெல்லாம்
வருவது ஞானத்தாலே வையக
முழுது மெங்கள்
பெருமைதா னிலவி நிற்கப் பிறந்தது
ஞானபாநு.

2. கவலைகள் சிறுமை, நோவு, கைதவம்
வறுமைத் துன்பம்,
அவலமா மனைத்தைக் காட்டில் அவலமாம்
புலைமை யச்சம்,
இவை யெலாம் அறிவிலாமை என்பதோர்
இருளிற் பேயாம்.
நவமுறு ஞானபாநு நண்ணுக ;
தொலைக பேய்கள்.

3. அனைத்தையுந் தேவர்க் காக்கி, அறத்தொழில்
செய்யு மேலோர்
மனத்திலே சக்தி யாக வளர்வது
நெருப்புத் தெய்வம் ;
தினத்தொளி ஞானங் கண்டீர் ; இரண்டுமே
சேர்ந்தால் வானோர்
இனத்திலே கூடி வாழ்வர் மனிதரென்
றிசைக்கும் வேதம.

4. பண்ணிய முயற்சியெல்லாம் பயனுற
வோங்கு மாங்கே
எண்ணிய எண்ண மெல்லாம் எளிதிலே
வெற்றி யெய்தும்;
திண்ணிய கருத்திேைடும் சிரித்திடு
முகத்திேைடும்
நண்ணிடு ஞானபாநு, அதனை நாம்
நன்கு போற்றின்.

---

## 11. ஒளியும் இருளும்

1. வான மெங்கும் பரிதியின் சோதி;
மலைகள் மீதும் பரிதியின் சோதி;
தானை நீர்க்கடல் மீதிலு மாங்கே
தரையின் மீதுந் தருக்களின் மீதும்
கானகத்திலும் பற்பல ஆற்றின்
கரைகள் மீதும் பரிதியின் சோதி;
மானவன்ற னுளத்தினில் மட்டும்
வந்து நிற்கும் இருளிது வென்னே!

2. சோதி யென்னுங் கரையற்ற வெள்ளம்
தோன்றி யெங்குந் திரைகொண்டு பாய,
சோதி யென்னும் பெருங்கடல், சோதிச்
சூறை, மாசறு சோதி யனந்தம்,

சோதி யென்னு நிறைவிஃ துலகைச்
சூழ்ந்து நிற்ப, ஒரு தனி நெஞ்சம்
சோதியன்ற தொர் சிற்றிருள் சேரக்
குமைந்து சோரும் கொடுமையி தென்னே!

3. தேமலர்க்கொ ரமுதன்ன சோதி,
சேர்ந்து புள்ளினம் வாழ்த்திடும் சோதி,
காமமுற்று நிலத்தொடு நீருங்
காற்று நன்கு தழுவி நகைத்தே
தாயயங்கி நல் லின்புறுஞ் சோதி,
தரணி முற்றுந் ததும்பி யிருப்ப,
இமை கொண்ட புலேயிருள் சேர்ந்தோர்
சிறிய நெஞ்சந் தியங்குவ தென்னே!

4. நீர்சுனைக் கணமரின் றுற் றிலக,
நெடிய குன்றம் நகைத் தெழில் கொள்ள,
கார்ச்சடைக்கரு மேகங்க ளெல்லாம
கனகமொத்துச் சுடர்கொண்டுலாவ,
தேர்ச்சி கொண்டுபல் சாத்திரங் கற்றுந்
தெவிட்டொ ணாத நலவின்பக் கருவாம
வேர்ச்சுடர் பரமாண் பொருள் கேட்டும
மெலிவொர் நெஞ்சிடை மேவுதலென்னே!

---

## 15. கடமை

கடமை புரிவா ரின்புறுவார்
என்னும் பண்டைக் கதை பேணேம்;
கடமை யறியோம தொழிலறியோம்;
கட்டென் பதனை வெட்டென் போம்;

மடமை, சிறுமை, துன்பம், பொய்
வருத்தம், நோவு, மற்றிவை போல்
கடமை நினைவுந் தொலைத் திங்கு
களியுற் றென்றும் வாழ்குவமே.

---

## 16. விடுதலை (1)

1. இந்தப் புவிதனில் வாழு மரங்களும்
இன்ப நறுமலர்ப் பூஞ்செடிக் கூட்டமும்
அந்த மரங்களைச் சூழ்ந்த கொடிகளும்
ஔடத மூலிகை பூண்டு புல் யாவையும்
எந்தத் தொழில் செய்து வாழ்வன வோ?

வேறு

2. மானுட ருழா விடினும் வித்து நடா விடினும்
வரம்புகட்டாவிடினுமன்றி நீர் பாய்ச்சாவிடினும்
வானுலகு நீர் தருமேல் மண்மீது மரங்கள்
வகை வகையா நெற்கள் புற்கள் மலிந் திருக்கு
மன்றே?
யா னெதற்கு மஞ்சுகிலேன், மானுடரே, நீவிர்
என் மதத்தைக் கைக் கொண்மின்; பாடுபடல்
வேண்டா;
ஊ னுடலை வருத்தா தீர்; உண வியற்கை கொடுக்கும்;
உங்களுக்குத் தொழிலிங்கே அன்பு செய்தல் கண்டீர்.

# 17. விடுதலை (2)

ராகம்—நாட்டை

பல்லவி

வேண்டுமடி யெப்போதும் விடுதலை, அம்மா!

சரணங்கள்

1. தூண்டு மின்ப வாடை வீசு துய்ய தேன் கடல
சூழ நின்ற தீவி லங்கு சோதி வானவர்
ஈண்டு நமது தோழ ராகி எம்மோ டமுதமுண்டுகுலவ
நீண்ட மகிழ்ச்சி மூண்டு விளைய
நினைத்திடுமின்ப மனைத்தும் உதவ
(வேண்டுமடி)

2. விருத்திராதி தானவர்க்கு மெலிவதின்றியே
விண்ணு மண்ணும் வந்து பணிய மேன்மை துன்றியே
பொருத்த முறநல் வேத மோர்ந்து
பொய்மை தீர, மெய்மை நேர
வருத்த மழிய வறுமை யொழிய
வையமுழுதும் வண்மை பொழிய
(வேண்டுமடி)

3. பண்ணில் இனிய பாடலோடு பாயு மொளி யெலாம்
பாரில் எம்மை யுரிமை கொண்டு பற்றி நிறகவே
நண்ணி யமரர் வெற்றி கூற
நமது பெண்கள் அமரர் கொள்ள
வண்ண மினிய தேவ மகளிர்
மருவ நாமும் உவகை துள்ள
(வேண்டுமடி)

# 18. விடுதலை—சிட்டுக்குருவி

பல்லவி

விட்டு விடுதலை யாகி நிற்பா யிந்தச்
சிட்டுக் குருவியைப் போலே.

சரணங்கள்

1. எட்டுத் திசையும் பறந்து திரிகுவை
ஏறியக் காற்றில் விரைவோடு நீந்துவை
மட்டுப் படாதெங்கும் கொட்டிக் கிடக்குமிவ்
வானொளி யென்னு மதுவின் சுவை யுண்டு
(விட்டு)

2. பெட்டையி னோடின்பம் பேசிக் களிப்புற்று
பீடையிலாத தோர் கூடு கட்டிக்கொண்டு
முட்டைதருங் குஞ்சைக் காத்து மகிழ்வெய்தி
முந்த வுணவு கொடுத்தன்பு செய்திங்கு (விட்டு)

3. முற்றத்திலேயுங் கழனி வெளியிலும்
முன்கண்ட தானியம் தன்னைக் கொணர்ந்துண்டு
மற்றப் பொழுது கதை சொல்லித் தூங்கிப் பின்
வைகறை யாகுமுன் பாடி விழிப்புற்று (விட்டு)

# 19. விடுதலை வெண்பா

1. சக்தி பதமே சரணென்று நாம் புகுந்து
பக்தியினாற் பாடிப் பலகாலும்—முக்திநிலை
காண்போ மதனாற் கவலைப் பிணி தீர்ந்து
பூண்போம் அமரப் பொறி.

## விடுதலை வெண்பா

2. பொறிசிந்தும் வெங்கனல்போற் பொய்தீர்ந்து தெய்வ
வெறி கொண்டா லாங்கதுவே வீடாம்—நெறி
கொண்ட
வையமெலாந் தெய்வ வலியன்றி வேறில்லை
ஐயமெலாந் தீர்ந்த தறிவு.

3. அறிவிலே தோன்றில் அவனியிலே தோன்றும்
வறிஞராய்ப் பூமியிலே வாழ்வீர்—குறிகண்டு
செல்வமெலாம் பெற்றுச் சிறப்புறவே சக்திதரும்
வெல்வயிரச் சீர்முகுந்த வேல்.

4. வேலைப் பணிந்தால் விடுதலையாம்; வேல் முருகன்
காலைப் பணிந்தாற் கவலைபோம்—மேலறிவு
தன்னாலே தான் பெற்று சக்தி சக்தி சக்தியென்று
சொன்னா லதுவே சுகம்.

5. சுகத்தினை நான் வேண்டித் தொழுதேன்; எப்போதும்
அகத்தினிலே துன்புற்றழுதேன்—யுகத்தினிலோர்
மாறுதலைக் காட்டி வலிமைநெறி காட்டி
ஆறுதலைத் தந்தா ளவள்.

# 20. மனப் பெண்

மனமெனும் பெண்ணே! வாழி நீ கேளாய்!
ஒன்றையே பற்றி யூச லாடுவாய்
அடுத்ததை நோக்கி யடுத்தடுத் துலவுவாய்
நன்றையே கொள்ளெனிற் சோர்ந்துகை நழுவுவாய்
விட்டுவிடென் றதை விடாதுபோய் விழுவாய்
தொட்டதை மீள மீளவுந் தொடுவாய்
புதியது காணிற் புலனழிந் திடுவாய்
புதியது விரும்புவாய் புதியதை யஞ்சுவாய்
அடிக்கடி மதுவினை யணுகிடும் வண்டுபோல்
பழமையாம் பொருளிற் பரிந்து போய் வீழ்வாய்
பழமையே யன்றிப் பார்மிசை யேதும்
புதுமை காணோமெனப் பொருமுவாய், சீச்சீ!
பிணத்தினை விரும்புங் காக்கையே போலே
அழுகுதல், சாதல், அஞ்சுதல் முதலிய
இழிபொருள் காணில் விரைந்ததி லிசைவாய்
அங்ஙனே
என்னிடத் தென்று மாறுத லில்லா
அன்பு கொண் டிருப்பாய், ஆவி காத்திடுவாய்,
கண்ணிலோர் கண்ணாய்க் காதின் காதாய்ப்
புலன் புலப்படுத்தும் புலனா யென்னை
உலக வுருளையில் ஒட்டுற வகுப்பாய்,
இன்பெலாந் தருவாய், இன்பத்து மயங்குவாய்,
இன்பமே நாடி யெண்ணிலாப் பிழை செய்வாய்,
இன்பங் காத்துத் துன்பமே யழிப்பாய்

இன்பமென் றெண்ணித் துன்பத்து வீழ்வாய்,
தன்னை யறியாய், சகத்தெலாந் தொளைப்பாய்
தன்பின் னிற்குந் தனிப்பரம் பொருளைக்
காணவே வருந்துவாய் காணெனிற் காணாய்,
சகத்தின் விதிகளைத் தனித்தனி யறிவாய்,
பொதுநிலை யறியாய், பொருளையுங் காணாய்.
மனமெனும் பெண்ணே! வாழி நீ கேளாய்!
நின்னொடு வாழு நெறியுநன் கறிந்திடேன்;
இத்தனை நாட்போல இனியுநின் னின்பமே
விரும்புவன்; நின்னை மேம்படுத் திடவே
முயற்சிகள் புரிவேன்; முத்தியுந் தேடுவேன்;
உன் விழிப் படாமல் என்விழிப் பட்ட
சிவமெனும் பொருளைத் தினமும் போற்றி
உன்றனக் கின்ப மோங்கிடச் செய்வேன்.

---

## 21. நெஞ்சொடு சொல்வது

1. இன்னுமொரு முறைசொல்வேன், பேதைநெஞ்சே
எதற்கு மினி யுளைவதிலே பயனொன்றில்லை;
முன்னர் நம திச்சையினாற் பிறந்தோமில்லை;
முதலிறுதி யிடைநமது வசத்திலில்லை;
மன்னுமொரு தெய்வத்தின் சக்தியாலே
வையகத்திற் பொருளெலாம் சலித்தல கண்டாய்;
பின்னையொரு கவலையுமிங் கில்லை நாளும்
பிரியாதே விடுதலையைப் பிடித்துக் கொள்வாய்.

2. நினையாத வினை யெல்லாம் விளைந்து கூடி
நினைத்தபயன் காண்பதவள் செய்கையன்றோ?
மனமார வுண்மையினைப் புரட்டலாமோ?
மஹாசக்தி செய்தநன்றி மறக்கலாமோ?
எனையாளு மாதேவி, வீரர் தேவி,
இமையவருந் தொழுந்தேவி, எல்லைத் தேவி,
மனைவாழ்வு பொருளெல்லாம் வகுக்குந் தேவி,
மலரடியே துணையென்று வாழ்த்தாய் நெஞ்சே.

3. சக்தியென்று புகழ்ந்திடுவோம். முருகனென்போம்,
சங்கரனென் றுரைத்திடுவோம், கண்ணனென்போம்.
நித்தியமிங் கவள் சரணே நிலை யென்றெண்ணி,
நினக்குள்ள குறைகளெல்லாந் தீர்க்கச்சொல்லி,
பக்தியினாற் பெருமையெல்லாங் கொடுக்கச்சொல்லி,
பசி பிணிக ளில்லாமற் காக்கச் சொல்லி,
உத்தமநன் னெறிகளிலே சேர்க்கச் சொல்லி
உலகளந்த நாயகிதா ளுரைப்பாய், நெஞ்சே.

4. 'செல்வங்கள் கேட்டால் நீ கொடுக்க வேண்டும்,
சிறுமைகளென் னிடமிருந்தால் விடுக்க வேண்டும்,
கல்வியிலே மதியினை நீ தொடுக்க வேண்டும்,
கருணையினா லையங்கள் கெடுக்க வேண்டும்,
தொல்லை தரு மகப்பேயைத் தொலைக்கவேண்டும்,
துணையென்று நின்னருளைத் தொடரச் செய்தே
நல்ல வழி சேர்ப்பித்துக் காக்கவேண்டும்,
நமோ நம ஓம் சக்தி' யென நவிலாய் நெஞ்சே.

5. பாட்டினிலே சொல்லுவது மவள் சொல்லாகும் ;
பயனன்றி யுரைப்பாளோ ? பாராய், நெஞ்சே !
கேட்டது நீ பெற்றிடுவாய், ஐயமில்லை ;
கேடில்லை, தெய்வமுண்டு, வெற்றி யுண்டு ;
மீட்டுமுனக் குரைத்திடுவேன், ஆதி சக்தி,
வேதத்தின் முடியினிலே விளங்கும் சக்தி,
நாட்டினிலே சனகனைப்போல் நமையுஞ் செய்தாள் ;
நமோ நம, ஓம் சக்தியென நவிலாய் நெஞ்சே.

---

## 22. மனமே

1. கண்ணன் திருவடி
எண்ணுக மனமே
திண்ணம் அழியா
வண்ணந் தருமே.

2. தருமே நிதியும்
பெருமை புகழும்
கருமா மேனிப்
பெருமா னிங்கே.

3. இங்கே யமரர்
சங்கந் தோன்றும்
மங்குந் தீமை
பொங்கும் நலமே.

4. நலமே நாடிற்
புலவீர் பாடீர்
நிலமா மகளின்
தலைவன் புகழே.

5. புகழ்வீர் கண்ணன்
தகைசேர் அமரர்
தொகையோ டசுரப்
பகைதீர்ப்பதையே.

6. தீர்ப்பான் இருளைப்
பேர்ப்பான் கலியை
ஆர்ப்பா ரமரர்
பார்ப்பார் தவமே.

7. தவறா துணர்வீர்
புவியீர் மாலும்
சிவனும் வானோர்
எவரும் ஒன்றே.

8. ஒன்றே பலவாய்
நின்றோர் சக்தி
என்றுந் திகழும்
குன்றா வொளியே.

---

## 23. மனத்திற்குக் கட்டளை

பேயா யுழலுஞ் சிறுமனமே
    பேணு யென் சொல் இன்று முதல்
நீயா யொன்றும் நாடாதே
    நினது தலைவன் யானே காண்
தாயாம் சக்தி தாளினிலும்
    தருமமென யான் குறிப்பதிலும்
ஓயாதே நின் றுழைத்திடுவாய்
    உரைத்தேன் அடங்கி உய்யுதியால்.

## 24. மனத்திற்கு

சென்றதினி மீளாது, மூடரே, நீர்
எப்போதும் சென்றதையே சிந்தை செய்து
கொன்றழிக்கும் கவலை யெனும் குழியில் வீழ்ந்து
குமையாதீர்! சென்றதனைக் குறித்தல் வேண்டாம்.
இன்று புதி தாய்ப் பிறந்தோம் என்று நீவிர்
எண்ணமதைத் திண்ணமுற இசைத்துக்கொண்டு
தின்று விளை யாடியின்புற் றிருந்து வாழ்வீர்;
தீமையெலாம் அழிந்துபோம், திரும்பி வாரா.

## 25. பகைவனுக் கருள்வாய்

பகைவனுக் கருள்வாய்—நன்னெஞ்சே
பகைவனுக் கருள்வாய்.

1. புகை நடுவினில் தீயிருப்பதைப்
பூமியிற் கண்டோமே—நன்னெஞ்சே
பூமியிற் கண்டோமே.

பகைநடுவினில் அன்புரு வானநம்
பரமன் வாழ்கின்றான்—நன்னெஞ்சே
பரமன் வாழ்கின்றான். (பகைவனு)

2. சிப்பியிலே நல்ல முத்து விளைந்திடுஞ்
செய்தி யறியாயோ—நன்னெஞ்சே
குப்பையிலே மலர் கொஞ்சுங் குருக்கத்திக்
கொடி வளராதோ!—நன்னெஞ்சே (பகைவனு)

3. உள்ள நிறைவிலொர் கள்ளம் புகுந்திடில்
உள்ள நிறைவாமோ?—நன்னெஞ்சே
தெள்ளிய தேனிலொர் சிறிது நஞ்சையும்
சேர்த்தபின் தேனாமோ?—நன்னெஞ்சே (பகைவனு)

4. வாழ்வை நினைத்தபின் தாழ்வை நினைப்பது
வாழ்வுக்கு நேராமோ?—நன்னெஞ்சே
தாழ்வு பிறர்க்கெண்ணத் தானழிவானென்ற
சாத்திரங் கேளாயோ?—நன்னெஞ்சே (பகைவனு)

5. போருக்கு வந்தங் கெதிர்த்த கவுரவர்
போல வந்தானுமவன்—நன்னெஞ்சே
நேருக் கருச்சுனன் தேரிற் கசை கொண்டு
நின்றதுங் கண்ணனன்றோ?—நன்னெஞ்சே
(பகைவனு)

6. தின்ன வரும்புலி தன்னையு மன்பொடு
சிந்தையிற் போற்றிடுவாய்—நன்னெஞ்சே
அன்னை பராசக்தி யவ்வுரு வாயினள்
அவளைக் கும்பிடுவாய்—நன்னெஞ்சே (பகைவனு)

# 26. தெளிவு

1. எல்லா மாகிக் கலந்து நிறைந்தபின்
ஏழைமை யுண்டோடா ?—மனமே !
பொல்லாப் புழுவினைக் கொல்ல நினைத்தபின்
புத்தி மயக்கமுண்டோ ?

2. உள்ள தெலாமோ ருயிரென்று தேர்ந்தபின்
உள்ளங் குலைவ துண்டோ !—மனமே ?
வெள்ள மெனப் பொழி தண்ணரு ளாழ்ந்தபின்
வேதனை யுண்டோடா ?

3. சித்தினியல்பு மதன் பெருஞ் சக்தியின்
செய்கையுந் தேர்ந்துவிட்டால்,—மனமே !
எத்தனை கோடி யிடர்வந்து சூழினும்
எண்ணஞ் சிறிது முண்டோ ?

4. செய்க செயல்கள் சிவத்திடை நின்றெனத்
தேவ னுரைத்தனனே ;—மனமே !
பொய்கருதாம லதன்வழி நிற்பவர்
பூதல மஞ்சுவரோ ?

5. ஆன்ம வொளிக்கடல் மூழ்கித் திளைப்பவர்க்
கச்சமு முண்டோடா ?—மனமே !
தேன் மடை யிங்கு திறந்தது கண்டு
தேக்கித் திரிவமடா !

## 27. ஆத்ம ஜயம்

1. கண்ணில் தெரியும் பொருளினைக் கைகள்
கவர்ந்திட மாட்டாவோ ?—அட,
மண்ணில் தெரியுது வானம், அது நம்
வசப்பட லாகா தோ ?
எண்ணி யெண்ணிப் பலநாளு முயன்றிங்
கிறுதியிற் சோர்வோமோ ?—அட,
விண்ணிலும் மண்ணிலும் கண்ணிலும் எண்ணிலு
மேவு பரா சக்தியே.

2. என்ன வரங்கள், பெருமைகள், வெற்றிகள்
எத்தனை மேன்மைகளோ—
தன்னை வென்றாலவை யாவும் பெறுவது
சத்திய மாகுமென்றே
முன்னை முனிவர் உரைத்த மறைப் பொருள்
முற்று முணர்ந்த பின்னும்
தன்னை வென்றாளும் திறமை பெறா திங்கு
தாழ்வுற்று நிற்போமோ ?

## 28. பரமசிவ வெள்ளம்

1. உள்ளும் புறமுமா
யுள்ளதெலாந் தானாகும்
வெள்ள மொன்றுண் டாமதனைத்
தெய்வமென்பார் வேதியரே.

2. காணுவன நெஞ்சிற்
கருதுவன உட்கருத்தைப்
பேணுவன யாவும்
பிறப்பதந்த வெள்ளத்தே.

3. எல்லைப் பிரி வற்றதுவாய்
யாதெனுமோர் பற்றிலதாய்
இல்லையுள தென் றறிஞ
ரென்றுமய லெய்துவதாய்

4. வெட்டவெளி யாயறிவாய்
வேறு பல சக்திகளைக்
கொட்டுமுகி லாயணுக்கள்
கூட்டிப் பிரிப்பதுவாய்

5. தூல வணுக்களாய்ச்
சூக்குமமாய்ச் சூக்குமத்திற்
சாலவுமே நுண்ணியதாய்த்
தன்மையெலாந் தானுகி

6. தன்மையொன் றி லாததுவாய்த்
தானே ஒருபொருளாய்த்
தன்மை பலவுடைத் தாய்த்
தான் பலவாய் நிற்பதுவே.

7. எங்குமுளான் யாவும்வலான்
யாவுமறி வானெனவே
தங்கு பல மதத்தோர்
சாற்றுவது மிங்கிதையே.

8. வேண்டுவோர் வேட்கையாய்
வேட்பாராய் வேட்பாருக்
கீண்டுபொரு ளாயதனை
யீட்டுவதாய் நிற்குமிதே.

9. காண்பார் தங் காட்சியாய்க்
காண்பாராய்க் காண்பொருளாய்
மாண்பார்ந் திருக்கும்,
வகுத்துரைக்க வொண்ணுதே.

10. எல்லாந் தானுகி
யிருந்திடினு மிஃதறிய
வல்லார் சிலரென்பர்
வாய்மையெல்லாங் கண்டவரே.

11. மற்றிதனைக் கண்டார்
மலமற்றுர் துன்பமற்றுர்
பற்றிதனைக் கொண்டார்
பயனனைத்துங் கண்டாரே.

12. இப்பொருளைக் கண்டார்
இடருக்கோ ரெல்லைகண்டார்
எப்பொருளுந் தாம்பெறுநிங்
கின்பநிலை யெய்துவரே.

13. வேண்டுவ வெலாம் பெறுவார்
வேண்டா ரெதனையுமற்
றீண்டுபுவி யோரவரை
யீசரெனப் போற்றுவரே.

14. ஒன்றுமே வேண்டா
துலகனைத்தும் ஆளுவர்காண்
என்றுமே யிப்பொருளோ
டேகாந்தத் துள்ளவரே.

15. வெள்ளமடா தம்பி
விரும்பியபோ தெய்தினை
துள்ளமிசைத் தானமுத
வூற்றாய்ப் பொழியுமடா.

16. யாண்டுமிந்த இன்பவெள்ளம்
என்றுநின்னுள் வீழ்வதற்கே
வேண்டு முபாய
மிகவுமெளி தாகுமடா.

17. எண்ணமிட்டா லேபோதும்
எண்ணுவதே யிவ்வின்பத்
தண்ணமுதை யுள்ளே
ததும்பப் புரியுமடா.

18. எங்கு நிறைந்திருந்த
ஈசவெள்ள மென்னகத்தே
பொங்குகின்ற தென்றெண்ணிப்
போற்றி நின்றாற் போதுமடா.

19. யாதுமா மீசவெள்ள
மென்னுள் நிரம்பியதென்
றோதுவதே போதுமதை
யுள்ளுவதே போதுமடா.

20. காவித் துணிவேண்டா
கற்றைச் சடை வேண்டா
பாவித்தல் போதும்
பரமநிலை யெய்துதற்கே.

21. சாத்திரங்கள் வேண்டா
சதுமறைகளேதுமில்லை
தோத்திரங்களில்லையுளந்
தொட்டு நின்றாற் போதுமடா.

22. தவமொன்று மில்லையொரு
சாதனையு மில்லையடா
சிவமொன்றே யுள்ளதெனச்
சிந்தை செய்தாற் போதுமடா.

23. சந்ததமு மெங்குமெல்லாந்
தானாகி நின்றசிவம்
வந்தெனுளே பாயுதென்று
வாய்சொன்னாற் போதுமடா.

24. நித்தசிவ வெள்ள மென்னுள்
வீழ்ந்து நிரம்புதென்றுன்
சித்தமிசைக் கொள்ளுஞ்
சிரத்தை யொன்றே போதுமடா.

## 29. பொய்யோ? மெய்யோ?

எல்லா சாஸ்திரங்களும் ஏறக்குறைய உண்மை தான். ஆனால், எல்லொருக்கும், எப்போதும், ஒரே சாஸ்திரம் ஒத்து வராது. சின்ன திருஷ்டாந்தம் சொல்லுகிறேன் :—

ஒரு செல்வர், கிழவனார் ; ஒரு வேளை ஆஹாரம் செய்து கொண்டு, லௌகிக விஷயங்களைத் தான் கவனியாமல், பிள்ளைகள் கையிலே கொடுத்து விட்டு நியம நிஷ்டைகள் ஜப தபங்களுடன் ஸுந்தர காண்டத்தையும் கடோபநிஷத்தையும் பாராயணம் செய்து கொண்டு வீட்டை விட்டு வெளியேறும் விருப்பமே மேலான வழியென்ற கொள்கை இந்தக் கிழவனாருக்குச் சரிப்பட்டு வரும்.

ஒரு 16 வயது ஏழைப்பிள்ளை ; தகப்பனில்லை ; வீட்டிலே தாயாருக்கும் தங்கைக்குமாக எங்கேனும் போய் நாலு பணம் கொண்டு வந்தால் தான் அன்றன்று அடுப்பு மூட்டலாம். இவன் மேற்படி சுந்தர காண்ட வழியைப் போய்ப் பிடித்தால நியாயமாகுமா ?

'இந்த உலகமே பொய்' என்று நமது தேசத்தில் ஒரு சாஸ்திரம் வழங்கி வருகிறது. ஸந்நியாசிகள் இதை ஓயாமல் சொல்லிக்கொண்டிருக்கட்டும். அதைப்பற்றி இந்த நிமிஷம் எனக்கு வருத்தமில்லை. குடும்பத்திலிருப்போருக்கு அந்த வார்த்தை பொருந்துமா? நடுவீட்டில் உச்சரிக்கலாமா? அவச்சொல் லன்றோ? நமக்குத் தந்தை

வைத்துவிட்டுப் போனவீடும் வயலும் பொய்யா? தங்கச் சிலைபோல நிற்கிருள் மனைவி. நமது துயரத்துக்கெல்லாம் கண்ணீர்விட்டுக் கரைந்தாள்; நமது மகிழ்ச்சியின் போதெல்லாம் உடல் பூரித்தாள்; நமது குழந்தைகளை வளர்த்தாள்; அவள் பொய்யா? குழந்தைகளும் பொய் தாஞ? பெற்றவரிடம் கேட்கிறேன். குழந்தைகள் பொய்யா? நமது வீட்டில் வைத்துக் கும்பிடும் குலதெய்வம் பொய்யா?

வீடுகட்டிக் குடித்தனம் பண்ணுவோருக்கு மேற்படி சாஸ்திரம் பயன் படாது. நமக்கு இவ்வுலகத்தில் வேண்டியவை நீண்ட வயது, நோயில்லாமை, அறிவு, செல்வம் என்ற நான்கும். இவற்றைத் தரும்படி தத் தம் குல தெய்வங்களை மன்ருடிக் கேட்க வேண்டும். எல்லா தெய்வங்களும் ஒன்று. அறம், பொருள், இன்பம் என்ற மூன்றிலும் தெய்வ ஒளி காணவேண்டும். தெய்வத்தின் ஒளி கண்டால் நான்காம் நிலையாகிய வீடு தானே கிடைக்கும்.

---

## உலகத்தை நோக்கி வினவுதல்

1. நிற்பதுவே, நடப்பதுவே, பறப்பதுவே,
    நீங்களெல்லாம்
சொற்பனந்தாஞ?—பல
    தோற்ற மயக்கங்களோ?
கற்பதுவே, கேட்பதுவே, கருதுவதே,
    நீங்களெல்லாம்
அற்ப மாயைகளோ?—உம்முள்
    ஆழ்ந்த பொருளில்லையோ?

2\. வானகமே, இளவெயிலே, மரச்செறிவே,
நீங்களெல்லாம்
கானலி னீரோ?—வெறுங்
காட்சிப் பிழைதானோ?
போனதெல்லாம் கனவினைப்போற்புதைந்
தழிந்தே போனதனால்
நானுமோர் கனவோ?—இந்த
ஞாலமும் பொய்தானோ?

3\. காலமென்றே யொருநினைவுங் காட்சியென்றே
பலநினைவும்
கோலமும் பொய்களோ?—அங்குக்
குணங்களும் பொய்களோ?
சோலையிலே மரங்களெல்லாம் தோன்றுவதோர்
விதையிலென்றால்
சோலை பொய்யாமோ?—இதைச்
சொல்லொடு சேர்ப்பாரோ?

4\. காண்பவெல்லா மறையுமென்றால் மறைந்ததெல்லாம்
காண்பமன்றோ?
வீண்படு பொய்யிலே—நித்தம்
விதி தொடர்ந்திடுமோ?
காண்பதுவே யுறுதிகண்டோம், காண்பதல்லா
லுறுதியில்லை
காண்பது சக்தியாம்—இந்தக்
காட்சி நித்தியமாம்.

(பின்னுரை:—முதற்பாட்டிலே, 'நிற்பது' 'நடப்பது' முதலியன உலகத்தில் தோன்றும் வடிவங்கள்; கற்பது,

கேட்பது முதலியன செய்கைகள். மூன்றும் பாட்டிலே, 'கோலமும் பொய்களோ, அங்கு குணங்களும் பொய்களோ' என்பது, தெளிவாகச் சொன்னால், 'தேளின் உருவம் மாத்திரம் பொய்யோ? அது கொட்டுவதும் பொய்தானோ?' என்ற கேள்வி,)

---

## 30. நான்

இரட்டைக் குறள் வெண் செந்துறை

1. வானிற் பறக்கின்ற புள்ளெலா நான்
    மண்ணிற் றிரியும் விலங்கெலா நான்
கானிழல் வளரு மரமெலா நான்
    காற்றும் புனலுங் கடலுமே நான்

2. விண்ணிற் றெரிகின்ற மீனெலா நான்
    வெட்ட வெளியின் விரிவெலா நான்
மண்ணிற் கிடக்கும் புழுவெலா நான்
    வாரியி லுள்ள வுயிரெலா நான்.

3. கம்பனிசைத்த கவியெலா நான்
    காருகர் தீட்டு முருவெலா நான்
இம்பர் வியக்கின்ற மாட கூடம்
    எழினகர் கோபுரம் யாவுமே நான்.

4. இன்னிசை மாதரிசையுளே னான்
இன்பத்திரள்க ளனைத்துமே நான்
புன்னிலை மாந்தர்தம் பொய்யெலா நான்
பொறையருந் துன்பப் புணர்ப்பெலா நான்.

5. மந்திரங்கோடி யியக்குவோ னான்
இயங்கு பொருளினியல்பெலா நான்
தந்திரங் கோடி சமைத்துளோ னான்
சாத்திர வேதங்கள் சாற்றினோ னான்.

6. அண்டங்கள் யாவையு மாக்கினோ னான்
அவை பிழையாமே சுழற்றுவோ னான்
கண்டநற் சக்திக் கணமெலா நான்
காரண மாகிக் கதித்துளோ னான்.

7. நானெனும் பொய்யை நடத்துவோ னான்
ஞானச் சுடர்வானிற் செல்லுவோ னான்
ஆனபொருள்க ளனைத்தினு மொன்றாய்
அறிவாய் விளங்கு முதற்சோதி நான்.

அனுபந்தம் 1.

# பாடல் முதற் குறிப்பகராதி

பக்கம்.


| | | |
|---|---|---|
| அச்சமில்லை யச்சமில்லை | ... | 2 |
| அல்லா, அல்லா, அல்லா | ... | 10 |
| ஆயிரந் தெய்வங்க ளுண்டென்று | ... | 4 |
| இந்தப் புவிதனில் வாழு மரங்களும் | ... | 20 |
| இன்னுமொரு முறை சொல்வேன் | ... | 25 |
| ஈசன் வந்து சிலுவையில் மாண்டான் | ... | 11 |
| உண்மை யறிந்தவ ருன்னை | ... | 1 |
| உள்ளும் புறமுமா | ... | 32 |
| எல்லாமாகிக் கலந்து நிறைந்தபின் | ... | 31 |
| கடமை புரிவா ரின்புறுவார் | ... | 19 |
| கண்ணன் திருவடி | ... | 27 |
| கண்ணில் தெரியும் பொருளினைக் கைகள் | ... | 32 |
| கற்பனை யூரென்ற நகருண்டாம் | ... | 12 |
| காக்கைச் சிறகினிலே நந்தலாலா | ... | 14 |
| சக்தி பதமே சரணென்று நாம் | ... | 22 |
| செத்த பிறகு சிவலோகம் வைகுந்தம் | ... | 4 |
| சென்றதினி மீளாது | ... | 29 |
| திருவளர் வாழ்க்கை கீர்த்தி தீரம் | ... | 17 |
| தேவர் வருகவென்று சொல்வதோ | ... | 15 |
| நிற்பதுவே, நடப்பதுவே | ... | 28 |
| பகைவனுக் கருள்வாய் | ... | 29 |

## பாடல் முதற் குறிப்பகராதி


| | | பக்கம் |
|---|---|---|
| பேயா யுழலுஞ் சிறுமனமே | ... | 29 |
| மங்கியதொர் நிலவினிலே | ... | 6 |
| மனமெனும் பெண்ணே | ... | 24 |
| வான மெங்கும் பரிதியின் சோதி | ... | 18 |
| வானிற் பறக்கின்ற புள் | ... | 40 |
| விட்டு விடுதலை யாகி | ... | 22 |
| வேண்டுமடி யெப்போதும் விடுதலை | ... | 21 |
| ஜய பேரிகை கொட்டடா | ... | 9 |
| ஜயமுண்டு பயமில்லை மனமே | ... | 8 |

அனுபந்தம் 2

# குறிப்புரை

இப் பகுதியின் முதற் பதிப்பு 1930-ல் பதிப்பிக்கப் பெற்றது. அப்பதிப்பிற் சேர்க்கப்பட்டிருந்த பாடல்களுள் எட்டு வேறு பகுதிகளிலேயும் சேர்க்கப்பட்டிருந்ததால் அவை இரண்டாம பதிப்பினின்றும் நீககப்பட்டன. அவை யாவன (1) கண்ணன் பாட்டிலுள்ள கண்ணன்—என் சற்குருவும், (2) தோத்திரப்பாடலிலுள்ள கண்ணன் துதியும், (3) 'பாரதி—அறுபத்தாறு' என்னும் பகுதியுள் அடங்கிய கடவுள் எங்கே இருக்கிறார்?' (4) குருககள் ஸ்துதி (குள்ளச்சாமி புகழ்.) (5) குருதர்சனம், (6) உபதேசம், (7) ஸர்வ மத ஸமரஸம் என்னும் பகுதிகளும், (8) புதிய ஆத்திசூடியின் காப்புச் செய்யுளான பரம் பொருள் வாழ்த்தும்.

1910-ம் வருஷ நவம்பர் மாதத்தில் வெளிவந்த பாடற் றொகுதியினின்றும் 'நான்' என்ற இப்பகுதியிலுள்ள 30-வது பாடல் சேர்க்கப்பட்டது. இப்பகுதியிலுள்ள 23, 26, பாடல்களும் அந்த 1910-ம் வருஷ பாடற்றொகுதியில் உள்ளன. இப்பகுதியிலுள்ள 13-வது பாடலான ஸூர்ய ஸ்தோமம—ஞானபாநு என்பது 'ஞானபாநு' என்னும் பத்திரிகையில் வெளியானது.

'மாதா மணிவாசகம்' என்றொரு நூல் 1941-ல் தென் ஆப்பிரிக்காவிலே வெளியிடப் பெற்றது. அதனுள் இப் பகுதியிலே 2, 3, 4, 28, என்னும் எண்ணுடைய பாடல் கள் வெளியாயின.

இவ்விரு தொகுதிகளிற் கண்ட பாட பேதங்களும் ஸ்ரீ. எஸ். தேசிக விநாயகம் பிள்ளையவர்கள் தெரிவித்த பாட பேதங்களும் வேறு குறிப்புக்களும் கீழே தரப்பட்டுள்ளன.

மா—மாதா மணி வாசகம்.

1910—1910 நவம்பரில் வெளியான பாடற்றொகுதி.

தே—ஸ்ரீ தேசிக விநாயகம்பிள்ளை யவர்கள் தெரிவித்த பாட பேதங்கள்.

மு.—1930-ல் வெளியான முதற் பதிப்பு.

பக். 9. வரி 16 : 'பொய்மைப்' என்பதற்குப் பதிலாக, 'துன்பப்' என்றும் பாடம்.

பக் 12. கற்பனையூர் 'The Town of Let's Pretend' என்னும் ஆங்கிலப் பாடல் 'The Herald of the Star' என்னும் பத்திரிகையில் 1948 ஜூனில் வெளியான 7 வால்யூம் 1 செ. இல் 'John Scurr' என்பவர் எழுதியது. அது வருமாறு

Now this is the town of 'Let's Pretend'
Where the fairies live and play ;
'Tis the gorgeous land of 'Make Believe'
Where everyone is gay.

This chair has become a pirate ship
That sails the Spanish Main
Full many a man must walk the plank
Ere we come home again.

'Tis here the young prince will welcome us
With the kiss that awoke his wife;
For happy they are, for ever and aye,
Free from all care and strife.

W'll drink our tea from dolly's cup,
Sweet nectar it will be.
We must hide away from the giant ogre
Till Jack can set us free.

The children dwell in this pleasant town
Where the toys all pulse with life
Each doll is a queen in a golden crown
Or else a prince's wife.

Each firewood stick is a dagger ornate
To destroy the Red Skin Chief,
And with cards or bricks we build a house
Which never shall shelter a thief.

O would that we of the elder breed
Whose youth has passed away
Could dream again as we dreamt of yore,
As the children dream at their play.

But the dear sweet land 'Make Believe'
We never can enter again;
We have grown too old and cannot pretend
Nor castle build in Spain.

*பக். 22, 12 : தே. பிழையிலாத வோர்'*

*பக். 22. 'விடுதலை வெண்பா': இது அந்தாதித் தொடையாக அமைந்துள்ளது.*

பக். 27, 'மனமே': இதுவும் அந்தாதித் தொடை.

பக். 29, வரி 2: (1910)—'பேயாவுழலுஞ்' என்று பாடம்; வரி 4: (1910) 'நீயா ஒன்றை' என்று பாடம்.

பக். 29, வரி 8. 'ஓயாதே நின்றுழைத்திடு நீ' என்றும் பாடம்.

பக். 29, தே. 'மனத்திற்கு': இப்பாடலின் முதல் மூன்று அடிகளும் நான்காமடியின் முற்பகுதியுமான ஏழு வரிகளும் 'பாரதி அறுபத்தாறு' என்னும் பாடலுள் 32–வது பாட்டில் உள்ளன.

பக். 29, வரி 14: 1932-வது வருஷத்தில் அச்சிட்ட பாரதி அறுபத்தாறு முதற்பதிப்பிலே 'வேண்டா' என்று பாடம்.

பக். 31, வரி 6: (1910) 'தேர்ந்தபின்' என்பதற்குப் பதிலாக 'கண்டபின்' என்று பாடம்.

பக். 31, வரி 10-13: இது (1910) இல் உள்ளது.

பக். 31, வரி 20: (1910) 'கண்டு' என்பதற்குப் பதிலாக 'கண்டது' என்று பாடம்.

பக். 39, வரி 21: தே. 'காண்பதெல்லா மறையுமென்றால் மறைந்த வெல்லாம்' என்றும், 'காண்பவெல்லாமறையுமென்றால் மறைந்த வெல்லாம்' என்றும் பாடம்.

பக். 39. ழ 4-வது பாட்டின் தலைப்பாக 'இயற்கை சொல்விடை' என்றுள்ளது.

பக். 40, வரி 1: தே. காண்பதுவேயுறுதி யென்றாய்' என்றும், 'காண்பதுவே யுண்மை கண்டாய்' என்றும் பாடம்.

